NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 25 July 2019

# ஊழியர் அணியை வலுவாக்க கல்விக்கழகங்கள் பெரும்பங்கு

தொழில் முனைவு, தரவு ஆய்வு, தரவுகள் மூலம் கணினிமயப்படுத்துதல் ஆகிய துறைகளில் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில் பல்கலைக் கழகங்களும் பலதுறை தொழில் கல்லூரிகளும் பெரும் பங்காற்ற வேண்டும்.

நான்காவது தொழில்துறை புரட்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில் நமது ஊழியர் அணியைத் தயார்ப்படுத்த வேண்டும் என்று வர்த்தக, தொழில் துணை அமைச்சர் சீ ஹொங் டாட் தெரிவித்தார். வருடாந்திர ஸ்கில்ஸ்ஃபியூச்சர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், "ஊழியர்களுக்கு மாற்றாக கணினியையோ இயந்திரத்தையோ பயன்படுத்துவதால் நான்காவது தொழில்துறை புரட்சியைச் சமாளிக்க முடியாது.

புதிய தொழில்நுட்பத்தை ஊழியர்களுக்குக் கற்பித்து அவர்களது திறனை மேம்படுத்துவதன்மூலம் புதிய தொழில்புரட்சியைச் சமாளிக்க முடியும்.

கல்விக்கழகங்களில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் இதில் முக்கிய பங்காற்றவிருக்கிறது. புதிய முதுநிலைப் பட்டக்கல்வி ஒன்றைத் தொடங்குகிறது.

அடுத்த மாதம் தொடங்கவிருக்கும் 'மாஸ்டர்ஸ் ஆஃப் சையன்ஸ் இன் இன்டஸ்டிரி 4.0' என்னும் இந்த முதுநிலைப் பட்டக்கல்வி, மின்னியல் துறையிலும் ஊழியர்கள் சிறந்து விளங்க வழிவகுக்கும்.

தரவு குறித்த ஆய்வு, மின்னியல் கட்டமைப்பு, உருமாற்ற அமைப்பு முறைகள் ஆகியவை தொடர்பான பாடங்களை இந்த முதுநிலைக் கல்வி கொண்டிருக்கும். அத்துடன் தொழிற்கூடங்களில் பணிபுரியும் அனுபவத்தையும் மாணவர்கள் பெறுவர்.

நிறுவனங்களுக்குத் தகுந்தாற்போல் பயிற்சிகள் தனித்துவமாக வரையறுக்கப்படும்.

இதுபோன்ற தனித்துவ பயிற்சி உருவாக்கத்திற்கு இந்தப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து யுனைடெட் ஓவர்சீஸ் பேங்க், மனித வள திறனாளர்கள் கழகம் ஆகியவை உள்ளிட்ட பத்து அமைப்புகள் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

அத்துடன் நீ ஆன், தெமாசெக் ஆகிய பலதுறைத் தொழிற்கல்லூரி மாணவர்கள், முதுநிலைப் பட்டக்கல்விக்கு முந்தைய பட்டயக் கல்விக்கு அனுமதிக்கப்படுவர்.

இளையர்கள் மட்டுமல்லாது பெரியவர்களும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளும்வகையில் 'ஸ்கில்ஸ்ஃபியூச்சர்' திட்டம் வழிவகுக்கிறது.

பெரியவர்களுக்காக உயர்கல்விக் கழகங்கள் சிறுசிறு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 2017ஆம் ஆண்டில் 400 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அவை மும்மடங்காகி இப்போது 1,500 ஆகியுள்ளது.

இதுபோன்ற சிறு பயிற்சி வகுப்புகளுக்கு பதிந்து கொண்டவர்கள் எண்ணிக்கை 40,000ஐ எட்டியுள்ளது என்றும் அமைச்சர் சீ ஹொங் டாட் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.